# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

29-5-66

விலை 20 காசு



**முகப்பில்:**

**"வள்ளுவம்" தந்து, வான்புகழ் கொண்ட பொய்யில் புலவனும் வள்ளுவப் பெருந்தகைக்கு சென்னை மாநகராட்சி, சிலையெடுத்துச் சிறப்புச் செய்யவிருக்கிறது.**

**சிலைத் தொழிலையே, கலைத் தொழிலாய்க் கொண்ட சிற்பி எஸ். பி. பிள்ளை இதனைச் செய்திருக்கிருர். இது சென்னை மயிலாப்பூர் பகுதியில் வருகிற ஜூன் 2ல் திறந்து வைக்கப்படவிருக்கிறது.**

## உலக அரங்கில்

# எரிகிற கொள்ளியில்......!

இராணுவ சர்வாதிகாரி அயூப்கான், தேவைப்படும் நிலையில் கூட அச்சமோ, ஆயாசமோ கொள்ளாமல் பேசுபவர். அவரே சில கிழமைகளுக்கு முன் கிழக்குப் பாகிஸ்தானில் "சுய ஆட்சி" என்ற கோரிக்கையை நோக்கி செயல்படும் அவாமி லீகின் நடவடிக்கைகளை எச்சரித்துப் பேசியபோது பாகிஸ்தானில் இந்தப் பிரச்சனையின்மீது ஒரு உள்நாட்டுப் போரே தோன்றினுலும் தோன்றலாம் என்று கூறினுர்.

பின்னும் சில நாட்களில் வெளிவந்த நியூயார்க் டைம்சின் டாக்கா செய்தியொன்று அதை மேலும் உறுதிப்படுத்தியது. "அதிக அளவு சுதந்திரம் கேட்டுப் போரிடும் ஒரு கிளர்ச்சி ,ன்றுமில்லாத அளவுக்கு கிழக்குப் பாகிஸ்தானில் ஒரு உச்ச கட்ட நிலையை அடைந்துள்ளது. இதுவே பாகிஸ்தான் முழுமைக்குமான ஒரு அரசியல் குழப்பத்தையே தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது" என எழுதியது அந்த ஏடு.

காஷ்மீர் பிரச்சனையைக் காட்டி இதுவரை மேற்குப் பாகிஸ்தானில் அரசியல் குளிர்காய்ந்து கொண்டிருந்த அயூப்கான் இனி அதே தந்திரத்தை டாக்காவிலும் காட்ட முடியாதென்பதையும் அச்செய்தி உறுதிப்படுத்துகிறது. "அமெரிக்கா அளித்த ஆயுதங்களையும் டாங்குகளையும் வைத்துக்கொண்டு 50 - இலட்சம் பேர்களைக் கொண்ட காஷ்மீருக்காகத்தான் போராடத் தெரிகிறது உங்களுக்கு; நாங்கள் 650 இலட்சம் பேர்கள் இருக்கிறோம்; எங்கள் பாதுகாப்பைப் பற்றிக் கேட்டால் மட்டும் நீங்கள் இந்தியாவின் நடுவில் இருந்தாலும் இந்தியாவுக்கு அருகில் அதன் எதிரி நமது நண்பன் சீன இருக்கிறது. அதனுல் உங்களுக்கு எந்த வித ஆபத்தும் நேராது என்று தந்திரமான சமாதானம சொல்கிறீர்களே?" என்று ராவல்பிண்டியைக் கேட்கும் போக்கு கிழக்குப் பாகிஸ்தில் வளர்ந்து வருகிறதாம்!

அண்மையில், பாகிஸ்தான் தனது இராணுவத்திற்கு சீன கொரில்லாப் போர் முறைப் பயிற்சி தருவதாகவும், சில சீனர்களே வந்திருந்து ஏற்பாடுகளைக் கவனிப்பதாகவும் செய்திகள் வேறு வந்துள்ளன. இந்நிலையில்—

ஆகாத அடுத்தவன் வீட்டுக் கூரையில் வைப்பதற்காக என்று பிடித்த கொள்ளி தவறி தனது வீட்டிலேயே விழுந்துப் பற்றி எரிந்த கதை அயூபுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை; ஆனுல் அரசியல் அரங்கத்தில் நடக்கும் சூடான விவகாரங்கள் தெரியாமலிருப்பதில் பொருளில்லை. காங்கோப் புரட்சியாளர்களுக்கென்று அனுப்பப்பட்ட ஆயுதங்கள் எப்படி சூடானின் உள்நாட்டுப் புரட்சிவாதிகளின் கைகளிலேயே சிக்கி விளைவுகளை ஏற்படுத்தியதோ அதே கதை கிழக்குப் பாகிஸ்தானில் திரும்ப நிகழாது என்பதற்கு என்ன உத்திரவாதம் வைத்திருக்கிருரோ தெரியவில்லை.

"இந்தியாவின் பக்கத்தில் அதன் எதிரி - நமது புதிய நண்பன்-சீன இருக்கிறது. இந்தியாவிலோ நாகர்கள் பகுதிகளில், மிசோக்கள் பிரதேசங்களில் புதுடில்லியை எதிர்த்து சுதந்திரம் கேட்டுப்புரட்சி

**தாத நிலை — மதிக்காதபோக்கு — எழாது என்று அயூப் (வண்டுமானுல் நம்பலாம்; சீனுவின் உள் மனத்தை உணர்ந்த உலகம் நம்பத் தயாராயில்லை**

இந்தோனேஷியாவிடம் கொண்டிருந்த நெருக்கத்தை விட சீன

யாம். இதுதான் சமயம்; மிசோக்களையும் நாகர்களையும் நம் வசப்படுத்துவோம்" என அந்த புரட்சியாளர்களுக்கு கிழக்குப் பாகிஸ்தானியப் பகுதிகளில் பயிற்சி, ஆயுத உதவி அனைத்தையும் அளித்துவருகிருர் அயூப், **கிழக்குப் பாகிஸ்தானிலேயே என்ன நிலைமைகள்** இருக்கிறது என்பதைத் தெரிந்தும் உணராதவராய்!

கிழக்குப் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிரான அரசியல் கேந்திரமாக அமைய முடியாது என்பது மட்டுமல்ல; **பாகிஸ்தானின் ஒரு அங்கமாகவே நீடித்து நிலைத்து இருக்குமா** என்ற கேள்வி உருவாகியுள்ளதை அதிபர் அயூப் சற்றே கூர்ந்து சிந்திக்கவேண்டும்.

காஷ்மீர்ப் பிரச்சனையில் — மற்றும் உலக விவகாரங்களில் எப்படியோ தெரியாது — கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்திலும் சீனவைத் தனது உண்மையான நண்பன் என்றே புதிய தோழன் என்றே அயூப் கருதிவிடுவாரானுல் அதைப்போன்ற அரசியல் தப்புக் கணக்கு வேறு எதுவும் இருக்காது.

**தனது ஆகிரமிப்புக் கொள்கையில் — சமயம் நேர்ந்தால் — கிழக்குப் பாகிஸ்தானை ராவல்பிண்டியின் ஒரு அங்கம் என்று சீன கரு**

அயூப்கானிடம் இது வரை கொள்ளவில்லை. இந்தோனேஷியாவில் என்ன நடந்தது என்பதை அயூப்கான் கட்டாயமாகச் சிந்தித்துத் தீரவேண்டும்.

கிழக்குப் பாகிஸ்தானில் எழும் எந்தவித குழப்பதையும் — **அது அயூபுக்கு எதிரானதாக இருந்தால் கூட**—சீன தனது ஆதிபத்திய விஸ்தரிப்புக்குத்தான் பயன்படுத்திக் கொள்ளும் என்ற உண்மை நாகர்களையும், பிசோககளையும் இந்தியாவுக்கு எதிராக உசுப்பிவிடும் பாகிஸ்தான் இப்போது உணர்ந்து கொள்ள முடியாது. சிறிது தொலை நோக்குடன் நோக்கினுல் தான் விளங்கும்.

இந்தக் கண்கொண்டு தான் இந்திய அரசும் டாக்காவில் நடக்கும் நிகழ்ச்சிகளை நோக்கவேண்டும். கிழக்கிப் பாகிஸ்தானில் அயூபை எதிர்த்துப்போர்க்கொடிபிடிக்கிருர்களாம் என இங்குள்ள பத்திரிகைகள் வேண்டுமானுல் சிறிது பெரிதாகப்போட்டுக்காட்டலாமே தவிர இந்திய அரசு அவ்வாறு இருப்பதோ இருக்கலாமென நினைப்பதோ முற்றிலும் தவறு.

எரிகிற கொள்ளியில் எந்த கொள்ளியும் நல்ல கொள்ளியல்ல!

**—அரசியல் மாணவன்**

> நீதி எங்கே வெல்லும்? அநீதிக்கு ஆளானவர்களுடன், அதற்கு ஆளாகாத மற்றவர்களும் சேர்ந்து நியாயம் வழங்கப் படுவதில் எங்கே அக்கறை காட்டுகிறார்களோ, அங்கேதான் நீதி வெல்லும்.
>
> —சோலன்


# காஞ்சி

மலர் 2 | 29—5—66 | இதழ் 44


# திருச்சி மாநாடு

திருச்சி மாநாட்டுக்கான நாட்களைக் குறிப்பிட்டு நாவலர் விடுத்துள்ள அறிக்கையும், வரவேற்புக் குழுவினர் அளித்துள்ள விளக்கமும், கழகத் தோழர்களுக்கு எழுச்சியைத் தருவதாக அமைந்திருக்கிறது.

திருச்சியில் நடைபெற இருக்கும் மாநாடு, திருச்சி — நஞ்சை எனும் இரு மாவட்டங்களையும் இணைத்த பெருமாவட்ட மாநாடாக அமைந்திருக்கிறது.

இரு மாவட்டங்களிலுமே, எழிலுடனும் ஏற்றத்துடனும் நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்திடும் ஆற்றலும் பழக்கமும் கொண்ட செயல் வீரர்கள் நிரம்ப உள்ளனர்.

இரு மாவட்டங்கள் இணைந்த மாநாடு என்றாலும், கழக மாநாடு, நீண்ட நாட்களுக்குப் பிறகு இங்கு நடத்தப்படுவதால், எல்லா மாவட்டங்களிலிருந்தும் கழகத் தோழர்கள் திரண்டு வருவார்கள் என்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

எல்லா மாவட்டத்தவரும் கூர்மையாகக் கவனிப்பார்கள் என்பதனை அறிந்த, செயல் வீரர்கள் திருச்சி மாநாட்டின் சிறப்புபற்றி நாடே கொண்டாடத்தக்க முறையிலே நிகழ்ச்சியில் நேர்த்தியை இணைத்தளிப்பார்கள் என்பதிலே நமக்கு எள்ளளவும் ஐயமில்லை.

மாவட்ட மாநாடுகளெல்லாம் முறைப்படி நடைபெற்று மாநிலமாநாடு நடத்தவேண்டிய கட்டம் இது. என்றாலும் நாட்டை அன்னியர் தாக்கிடும் நிலை கிளம்பியபோது நாம் நமது கழகப்பணிகளை நிறுத்திவைத்திருந்ததால், நமது திட்டத்தில் மாறுதல் ஏற்பட்டு விட்டது.

இது குறித்து நாம் வருத்தப்படத் தேவையில்லை. நாடு முதலில்! கட்சி அதற்குப்பிறகே! என்ற கண்ணியத்தைக் காத்து நின்றது, தவறுமல்ல.

காலம் கடுகி ஓடிக்கொண்டிருக்கிறது. அரசியல் உலகிலே கடும் காற்று வீசத் தலைப்பட்டுவிட்டது. இந்த நேரத்தில் நடத்தப்படும் திருச்சி மாநாடு, ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தத்தக்கதாக அமைகிறது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு நமது கழகத் தோழர்கள் மிகப்பெரும் அளவிலேகூடி, கழக வளர்ச்சிபற்றிக் கலந்துரையாடும் நல்வாய்ப்பு இது.

தத்தமது தொகுதிகளின் நிலைமைபற்றி ஒருவருக்கொருவர் கலந்து பேசி, பொது நிலைமைபற்றிய 'கணிப்பு' பெற்றிடத்தக்க நல்வாய்ப்பாகும்.

இம் மாநாட்டுக்கு, மேலவை உறுப்பினரும், விளக்கமளித்துப் பிரச்சினைகளை மக்கள் மனதிலே பதியவைக்கும் ஆற்றல் பெற்றவருமான பேராசிரியர் **அன்பழகன்** தலைமைவகிக்கிறார்.

சுயமரியாதை இயக்க காலந்தொட்டு தொண்டாற்றி, தமிழகக் கழகத் தோழர்களின் உள்ளத்தில் ஓர் உன்னதமான இடம்பெற்றுள்ள செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, மாநாட்டைத் துவக்கிவைக்கிறார்.

கடந்தமுப்பதாண்டுக்காலமாகப் பொதுத்தொண்டாற்றி அனுபவம் பெற்றுள்ள அண்ணாமலை அவர்கள் நமது இயக்கம் எந்தெந்த கட்டத்தில் என்னென்ன இன்னலைச் சந்தித்திருக்கிறது என்பதனையும், இப்போது நம்மை நோக்கிப் பாய்ச்சப்படும் இன்னல் எத்தகையதாக இருக்கும் என்பதனையும் எடுத்துரைத்து கழகத் தோழர்களுக்குக் கருத்து விருந்தளிப்பார்.

கழகம் மேற்கொண்டுள்ள பணியின் தூய்மை குறித்தும், இன்றைய அரசியல் நிலைமை குறித்தும் ஆய்வுரை அளித்திடக்கழகமுன்னணியினர் அனைவரும் வருகின்றனர்.

மாநாட்டில், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனின் நாடகங்கள் ஏற்பாடாகி இருப்பது, கலை மணம் கமழ்ந்திடும் இனிமையை நமக்களிக்க இருக்கிறது.

திருச்சி மாநாட்டின் தோற்றம், ஏற்றம், அங்கு கூடிடும் கழகத் தோழர்களின் எழுச்சி ஆகியவற்றினை நாடாள்வோரும் கூர்ந்து கவனிப்பர் என்பதனை எடுத்துரைக்கத் தேவையில்லை.

இம்மாநாட்டிலே திரண்டிடும் அணிவகுப்பு, கழக வளர்ச்சியினை மாற்றாரும் உணரத்தக்கதாக அமையவேண்டும்.

தி. மு. கழகம் ஒரு பெரிய குடும்பம்!—என்கிறோம்.

கழகத் தொடர்புள்ள குடும்பங்கள் பல்லாயிரக் கணக்கிலே திருச்சியைத் திருநகராக்கிட வேண்டுகிறோம்.

மலர்ந்த முகம்! ஒளிவிடு கண்கள்! உற்சாகமான உரையாடல்! எழுச்சி!—இவைகளைக் காணவும் கேட்கவும் ஆர்வத்துடன் உள்ள பலப் பல ஆயிரவரும் இங்கு கூடிடுவர்.

கழகத்தவர் நடாத்திடும் மாநாடு மிகச் சிறப்புள்ளதாகவே இருக்கும்; அவர்களைப்போல அருமையாக மாநாட்டு நிகழ்ச்சியினை நடாத்திக் காட்டத்தக்கவர்கள் இல்லை என்றெல்லாம் ஏற்கனவே பல்வேறு அரசியல் கட்சியினரும் பாராட்டியுள்ளனர்.

அந்தப் புகழ் மேலும் பனமடங்கு அதிகமாகித் திகழத்தக்க முறையில் திருச்சி மாநாடு அமையவேண்டுமென விழைகின்றோம்.

நாட்கள் அதிகம் இல்லை! நாடு, நிரம்ப எதிர்பார்க்கிறது!! எனவே மாநாட்டு அமைப்பாளர்கள் மிகச் சுறுசுறுப்புடன் பணியாற்றித் தீரவேண்டும்.

திருச்சி மாநாட்டு வெற்றி, பிற மாவட்டங்களுக்குப் புத்தார்வம் ஊட்டத்தக்கதாக அமைதல் வேண்டும்.

அதற்கேற்ற ஆற்றல் படைத்தவர்கள் நிரம்ப உள்ள பெருவட்டம். பொன்னியின் செல்வர்கள் நடாத்திடும் மாநாடு பொலிவுள்ளதாகத்தானே அமையும்.

❋

# கேள்வி--பதில்!

1 முந்திரா புகழ் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் என்கிறார்களே, முந்திரா விவகாரத்தில், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு என்ன தொடர்பு?

ஊரே கொதித்ததே அந்த விவகாரம்பற்றி! முந்திராவுக்கு இந்தக் காங்கிரஸ் சர்க்கார் கொள்ளை கொள்ளையாகப் பணம் கடனாக அள்ளிக் கொடுத்தது. அது முறையற்றது என்பது குற்றச்சாட்டு. அப்போது டி.டி. கிருஷ்ணமாச்சாரியார்தான் நிதி மந்திரி! இவரைக் குடைந்தெடுத்தார்கள் பாராளுமன்றத்தில்! விசாரணைக் கமிஷன் அமைத்தார்கள். இப்போது கல்வி அமைச்சராக உள்ள சக்ளா பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தார். அவர்தான் விசாரணை நடத்தினார்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சு நம்பத்தக்கதாக இல்லை—என்று கமிஷன் கருத்தளித்தது! போதாதா, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எப்படிப்பட்டவர், அவருடைய திருக்கலியாண குணம் எப்படிப்பட்டது என்பதை விளக்க.

(2) காங்கிரஸ், ஆட்சி நடத்த முடியாவிட்டால், கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி நடத்துவதை நான் விரும்புகிறேன் என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறுகிறாரே அதுபற்றி என்ன எண்ணுகிறீர்?

முன்பு நடந்ததை நினைவுபடுத்திக்கொள்கிறேன். இப்போது இவ்வளவு உருகுகிறாரே இந்த 'முன்னாள்' அன்று கேரளாவில் கம்யூனிஸ்டுக்கட்சி ஆட்சி அமைத்தபோது, இவருடைய கட்சிதானே, கலகம் செய்து, பலாத்காரத்தை அவிழ்த்துவிட்டு கம்யூனிஸ்டு ஆட்சியைக் கவிழ்த்தது; நினைவிலே இருக்கிறதே! இப்போது ஏதோ, கம்யூனிஸ்டு கட்சியிடம் பரிவு காட்டுவது போலப் பேசுவது வெறும்பசப்பு—வேறென்னவாக இருக்க முடியும்.

(3) சீனாவுடன் சமரசம் பேச வேண்டும் என்று இடது சாரிகள் சொல்லுகிறார்களே, ஆச்சரியமாக இல்லையா?

இடதுசாரி கம்யூனிஸ்டுகள் மட்டும் அதுபோலச் சொல்லவில்லை. வலதுசாரிகளும் கூடத்தான்! அது மட்டுமல்ல; காங்கிரசிலேயே ஒரு கணிசமான அளவினர் இதே கருத்தைக் கொண்டுள்ளனர். ராஜ்ய சபை உறுப்பினர் டாக்டர் சாப்ரு இது குறித்து அங்கு பேசியுமிருக்கிறார். ஆகவேதான் எனக்கு அத்தகைய கருத்தை இடதுசாரிகள் வெளியிடுவது கேட்டு ஆச்சரியம் ஏற்படவில்லை. ஆனால் எனக்குக் கவலை பிறப்பது எதனால் என்றால் சமரசம் பற்றி இங்கு பல முனைகளிலே பேச்சு எழும்பிய பிறகும் சீனா துளியும் அக்கறை காட்டாமல், தன் பகைப் போக்கைக் கக்கியபடி இருக்கிறதே, அதுதான்.

(4) காங்கிரஸ் கட்சியிலே, கருத்து மாறுபாடு கொண்டவர்கள் இருக்க வேண்டியதில்லை; வெளியே போகலாம் என்று இந்திராகாந்தியார் கூறுகிறாரே; அதுபற்றி என்ன கருதுகிறீர்?

அதுபற்றி அங்கு உள்ளவர்கள் அல்லவா கருதவேண்டும்! அம்மையாருக்குத் தைரியம்; தேர்தலுக்கான நேரம் இது; டிக்கட் பெறும் நேரம்; இந்த நேரத்தில், போ! வெளியே! என்று சொன்னாலும் பலர் போகமாட்டார்கள்! காரியவாதிகள்போக்கு அப்படி என்பது புரிகிறது. அதனால்தான் அந்தப்போடுபோடுகிறார்!

(5) நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிக்கவே இல்லையாமே, ஏன்?

நாலாவது திட்டத்துக்குத் தேவைப்படும் அன்னிய நாட்டு உதவி எவ்வளவு கிடைக்கும் என்ற கணக்குப் பார்த்து, திட்டம் தயாரிக்கலாம் என்றார்கள் முன்பு. அசோக்மேதா அமெரிக்கா சென்றார்; திரும்பியுள்ளார். அவர் கூறுவது, நாலாவது திட்டத்தைத் தயாரித்துக் காட்டுங்கள் அதைப் பார்த்துவிட்டுப் பணம் எந்த அளவு கடன் கொடுக்கமுடியும் என்பதைக் கூறுகிறோம் என்று அமெரிக்க அரசு கூறுகிறதாம். இந்தச் செய்தியைத்தான் அசோக்மேதா கொண்டுவந்திருக்கிறார்!

கடன் எவ்வளவு கிடைக்கும் என்ற அளவு தெரிந்து நாலாவது திட்டத்தைத் தயாரிக்கலாம் என்றநிலை மாறி, நாலாவது திட்டத்தைத் தயாரித்துக் காட்டி, எவ்வளவு கடன் அமெரிக்கா கொடுக்கிறது என்று பார்க்கும் நிலை வந்திருக்கிறது.

(6) அமெரிக்கா ஏன் இன்னமும் வியட்நாமில் விடாப்பிடியாகப் போர் நடத்திக்கொண்டிருக்கிறது?

கிட்டாதாயின் வெட்டென மற! என்ற பழமொழி தெரியாததால்.

(7) மலாசியா விஷயமாக டாக்டர் சுகர்னோ தமது போக்கை மாற்றிக்கொண்டுவிட்டாராமே ஏன்?

எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுவானேன்!– என்ற பழமொழி அவருக்கு இப்போது புரிந்துவிட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். அவர்போக்கு மாறியதற்கு அதுதான் காரணமாக இருக்கவேண்டும்.

(8) நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் மேனாட்டுச் சுற்றுப் பயணம்பற்றிய விவரம் கூற முடியுமா?

அதுபற்றிய சுவையான தகவல்களை அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்வதுதான், பலன் அளிக்கும் — உங்கள் ஊரில் சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்து.

(9) கழகத்திலே உள்ளவர்களைப்பற்றிய தகவல் அனைத்தும் தங்களுக்குத் தெரியும் என்று எங்கள் ஊரில் ஒரு காங்கிரஸ் பேச்சாளர் கூறினார்! அவ்வளவு சாமர்த்தியம் கொண்டவர்களா அவர்கள்!

தெரியாது! ஆனால் எங்கள் ஊரில் ஒருவர் இருக்கிறார், அவர் சொல்லுகிறார், ஒருவர் ஏப்பம் விடுவதைக்கொண்டே அவர் என்

15-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

"நாலுபேரைக் கலந்து பேசினீர்களா?"
"நன்றாக யோசித்துப் பார்த்தீர்களா?"
"உங்களுக்குத் தெரியாதா நல்லது, கெட்டது."
"அவருக்குத் தெரியும் எல்லாம்."
"நமக்கு என்ன தெரியும்?"
"அவருக்குப்போய் நாம் சொல்லுவதா!"
"நாம் சொன்னாலா அவர் எடுத்துக்கொள்ளப்போகிறார்."
"அவரிடம் போய் யார் பேசமுடியும்!"
"யாரை அவர் கிட்டே சேர்ப்பார்!"
"அவரைப்போய் பார்க்க முடியுமா?"
"நம்மை எல்லாம் பார்க்க அவருக்கு ஏது நேரம்."

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டத்தைக் காட்டுவது என்பதை விளக்கத் தேவையில்லை.

கட்டங்கள் என்பது மட்டுமல்ல, ஒவ்வொருவிதமான நிலைமை மாற்றத்தைக் காட்டுகின்றன.


## 'சிலர்' 'பலர்'

ஊரிலே 'பெரியவர்' ஆக முனைபவருக்கும், யாராவது ஒரு பெரியவருடைய சொற்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற இயல்பு கொண்டவர்களுக்கும் இடையே ஏற்படும் 'தொடர்பு' பல கட்டங்களை அடைகிறது; அந்தத் தொடர்பு, பல நிலைமை மாற்றங்களை உண்டாக்குகிறது. நல்லதுதான் சொல்லுகிறார் என்ற எண்ணமும், சொல்லுவது நல்லதற்காகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையும் உள்ள கட்டத்தில், நல்லதுதான் சொல்லுகிறார் என்றாலும், நல்லதற்குத்தான் சொல்லுகிறார் என்ற நம்பிக்கை இருந்தாலும், நல்லது சொல்லத்தக்கவர்கள் வேறு பலர் இருப்பார்களே, அவர்களுடன் இவர் கலந்துபேசி, தான் கூறுவது நல்லதுதான் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டால் மேலும் நல்லதாக இருக்குமே என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும்போதுதான்,

**நாலுபேரைக் கலந்து பேசினீர்களா?**

என்று கேட்கத்தோன்றும்.

அறிவாளிதான் — நல்லதுதான் சொல்லுவீர்கள் — ஆனால் உங்களுடைய அறிவு மட்டும் போதுமா—அறிந்தவர்கள் பலர் இருப்பார்களே, அவர்களையும் கலந்து பேசினால் தானே நல்லது—உங்களுக்கு மட்டும் 'சரி' என்று தோன்றிவிட்டால் போதுமா-உங்கள் பேச்சை மட்டும் நம்பி நாங்கள் உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியுமா—யோசனை கூறத்தக்கவர்கள், நல்லதா கெட்டதா என்று ஆராய்ந்து பார்த்துச் சொல்லத்



தகுதி பெற்றவர்கள் பலர் இருக்கிறார்களே, அவர்களிலே நாலுபேரைக் கலந்து பேசினீர்களா என்று கேட்கும் போக்கிலேதான்

**நாலுபேரைக் கலந்து பேசினீர்களா**

என்று கேட்கிறார்கள்.

அதன் உட்பொருள், யோசனை கூறத்தக்க **பலர்** இருக்கிறார்கள், அவர்களிலே ஒருவர் நீங்கள்; உங்கள் ஒருவருடைய யோசனையை மட்டும் ஏற்றுக்கொள்ளுவது முறையாக இருக்காது; மேலும் பலரும் உங்கள் யோசனையைச் சரியானது என்று ஒப்புக்கொள்கிறார்கள் என்று தெரிந்தால்தான், உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்ள மனம் இடம் கொடுக்கும், என்பதாகும்.

எல்லா மக்களுக்குமே, நல்லது கெட்டது புரிந்து கொள்ளத்தக்க, பொது அறிவு இருக்கத்தான் செய்கிறது; சிந்திக்கும் திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சிந்திக்கும் திறனைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும், பக்குவப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும், கூர்மையாக்கிக்கொள்ளும் வாய்ப்பும், எல்லோருக்கும் கிடைத்துவிடுவதில்லை; எல்லோருக்கும் ஒரு சீராக இருந்து விடுவதுமில்லை.

**அதனால்தான், சிலர், பலருக்கு யோசனை கூறிடும் அவசியமே எழுகிறது. அந்தச் சிலர், 'எல்லாம் அறிந்தவர்கள், பலர் ஏதும் அறியாதவர்கள் என்பதால் அல்ல.**

அந்தச் சிலர், எதையும் சிந்தித்துப் பார்த்திடும் வாய்ப்பை அதிக அளவில் பெற்றுள்ளனர். அந்தப் பலர் அத்தகைய வாய்ப்பை, போதுமான அளவு பெற்றுக்கொள்ள முடிவதில்லை என்பதுதான், உள்ள நிலைமை.

சிந்திக்கும் திறனைப் பயன்படுத்திக்கொள்ளவும் செம்மைப்படுத்திக்கொள்ளவும், 'பலர்' வாய்ப்புப் பெற முடியாமலிருப்பதற்குக்காரணம், அவர்களுக்கு அதற்கு ஏற்ற அளவு அறிவுத் தெளிவு இல்லை என்பது அல்ல, அவர்களின் வாழ்க்கை முறை அவர்களுக்கு இக்கட்டாக' அமைந்துவிடுவதுதான் காரணம்.

**இந்த அடிப்படையின் மீதுதான், 'ஜனநாயகம்' எழுப்பப்பட்டிருக்கிறது; சிலருக்கு 'எல்லாம் தெரியும்'—பலருக்கு, ஏதும் தெரியாது' என்ற ஆணவத்தின் மீது அல்ல.**

**அந்த ஆணவத்தின்மீது அமைக்கப்படுவது, சர்வாதிகாரம்.**

எனக்கும் தெரியும், உனக்கும் தெரியும், முயற்சித்தால் எல்லோருக்கும் தெரியக்கூடியதே. ஆனால் எனக்கு வேறு வேறு பிடிப்புகள், பிரச்சினைகள், இக்கட்டுகள் உள்ளன. ஆகவே நேரம் இல்லை யோசிக்க. உனக்கு அவ்விதம் இல்லை, எதுபற்றியும் சிந்தித்துப் பார்த்திடப்போதுமான, வாய்ப்பு இருக்கிறது; ஆகவே உன் 'யோசனை'யை நான் கேட்டுக்கொள்ளுகிறேன், என்ற முறையிலே அமையும் தொடர்புதான் ஜனநாயக முறை.

எல்லாம் அவருக்குத் தெரியும்—எனக்கு ஏதும் தெரியாது என்று, ஏமாளிகள்கூட ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; ஆனால் சர்வாதிகாரி, எல்லாம் எனக்குத் தெரியும், மற்றவர்களுக்கு ஏதும் தெரியாது என்று கூறிட முற்படுவான்.

உனக்குத் தெரியும், யோசனை கூறத்தக்கவன் தான் நீ; ஆனால் உன் யோசனை மட்டும் போதாது வேறு பலரையும் கலந்து பேசி, உன் யோசனையை நாங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக ஆக்கிக் கொள், என்று கூறிடும் கட்டம், நாலு பேரைக் கலந்து பேசினீர்களா என்பது.

சொல்லுபவர்கள் — கேட்டுக் கொள்பவர்கள் என்ற இரு பிரிவு, பணம், அதிகாரம், ஜாதி போன்ற அடிப்படைமீது அமைக்கப்படாமல், கேட்டுக்கொள்பவர்களின் தெளிவான சம்மதம் பெற்று மட்டுமே சொல்லுபவர்கள் இயங்க முடியும் என்ற அடிப்படையில் அமைவதே அடிமைத்தனத்தைப் புகுத்தாத, ஒரு அன்புத் தொடர்பை உண்டாக்கி வைக்கும். அந்த அன்புத் தொடர்புதான் ஜனநாயகம்.

அந்த நிலையிலே இருந்து மாறினாலோ, அந்த நிலை மாற்றப்பட்டு விட்டாலோ, பலர், சிலரிடம் யோசனை கேட்கும்போது, வேறு நாலு பேருடன் கலந்து பேசினீர்களா என்று கேட்பதே தவறு என்றோர் எண்ணம் கொண்டு, யோசனை கூறத்தக்கவர் தாங்கள்தான், அதிலே ஐயப்பாடு இல்லை! தங்களைவிட மேலான யோசனை கூறத்தக்கவர் வேறு எவரும் இருப்பதாக நாங்கள் எண்ணவில்லை, ஆனாலும் இதுபற்றித் தாங்கள் நன்றாக யோசித்துப் பார்த்தீர்களா என்று கேட்க முற்படுகின்றனர்.

இந்தக் கட்டம் பிறக்கும்போதே, ஒரு படி கீழே இறங்கிவிட்ட நிலை ஏற்பட்டுவிட்டது என்பது பொருளாகி விடுகிறது.

இந்தக் கட்டத்தில், யோசனை கூறுபவர், சற்று உயர்ந்த இடத்திலே அமர்ந்துகொள்ளுகிறார்; கேட்டுக் கொள்பவர்கள், தமது குரலைச் சற்று தாழ்த்திக் கொள்கிறார்கள்; சிலருக்கும் பலருக்கும் இடையே ஏற்பட்டுள்ள அன்புத் தொடர்பு சிறிதளவு கெட்டுவிடுகிறது; அந்த அளவுக்கு ஜனநாயகத்தின் தூய்மையும் பாதிக்கப்பட்டுப் போய்விடுகிறது.

**உங்களுக்குத் தெரியாதா நல்லது, கெட்டது**

என்று பேசும் கட்டம் வந்ததும், ஜனநாயகத்தின் தூய்மை மேலும் கெடுகிறது என்று கூறலாம்.

கூறப்படும் யோசனை நல்லதா, கெட்டதா? இந்த யோசனையை நாலு பேரைக் கலந்து ஆலோசித்துத் தான் கூறுகிறாரா அல்லது தாமாகவே சொல்லுகிறாரா? தீர யோசித்துச் சொல்லுகிறாரா அல்லது மனதிலே தோன்றியதைச் சொல்லுகிறாரா என்றெல்லாம் எண்ணிப் பார்ப்பதுகூடத் தேவையில்லை, கூடாது, தவறு, என்று நினைத்துக்கொண்டு, அவர் சொல்லுவதால் அது நல்லதாகத்தான் இருக்கும், ஏனெனில் அவர் நல்லது கெட்டது தெரிந்தவர் என்று ஒப்புக் கொள்ளும் **பணிவு மனப்பான்மை** கொண்டு விடுகின்றனர். இதன் மூலம், அந்தப் 'பலர்' தாமாகவே தமது நிலையைக் கீழ்மட்டம் கொண்டு செல்கின்றனர். ஜனநாயகத்தின் அடிப்படையான அன்புத் தொடர்பு பாழ்படுத்தப்பட்டு, **'தலை அசைக்கும்'** நிலை ஏற்பட்டு விடுகிறது.

**அவருக்குத் தெரியும் எல்லாம்!** என்ற பேச்சு, எதற்கும் 'ஆமாம்' போடுகிறாயே, அவர் கூறிய யோசனை நல்லதாக இல்லையே, அதை ஏன் ஏற்றுக் கொள்ளுகிறாய் என்று வேறு சிலர் கூறிடும்போது, யோசனை நல்லதுதான் என்று மெய்ப்பிக்கவோ, வாதாடவோ இயலாமல், யோசனை கூறுபவரிடமே விளக்கம் பெறவோ, ஐயப்பாட்டினை நீக்கிக்கொள்ளவோ முனையாமல், அவர் கூறுவதை அப்படியே ஒப்புக்கொள்கிறேன்; புத்தியில்லாததால் அல்ல; **அவருக்கு எல்லாம்**

தெரியும் என்று நான் நம்புவதால், என்று பேசுகின்றனர்.

எதைச் சொன்னாலும் தலை ஆட்டி விடுகிறோமே, அதைச் சிலர் இடித்துக் காட்டுகிறார்களே என்பதை உணரும்போது எழும்பும் எரிச்சலையும் கோபத்தையும் குறைத்துக்கொள்ள

**எல்லாம் அவருக்குத் தெரியும்**

என்று கூறிடத் தோன்றுகிறது.

எல்லாம் அவருக்குத் தெரியும் என்று கூறிட முற்படும்போதே, நான் எதைப்பற்றியும் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை, ஏனெனில் எனக்காக எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்து, எனக்கு எது நல்லது என்பதைக் கண்டறிந்து கூறிடும் பொறுப்பு வேறு ஒருவரிடம் ஒப்படைத்து விட்டேன், அவர் எல்லாம் தெரிந்தவர்! என்று நம்பிக்கையை அழுத்தமாகக் கொண்டுவிட்டதாக ஆகிவிடுகிறது.

இங்கிலை, அடிமைத்தனத்தை விரும்பி வரவேற்பதாக ஆகிவிடுகிறது.

'ஆண்டான் - அடிமை' எனும் முறை ஜனநாயகத்துக்கு முற்றிலும் முரணானது என்பது மட்டுமல்ல, அந்தக் கேடான முறையை ஒழித்திட வந்த ஏற்பாடே, ஜனநாயகமாகும்.

அதே ஜனநாயகத்தில், சிலருக்கும் — பலருக்கும் இடையில் இருக்கவேண்டிய தொடர்பு, அறிவுத் தெளிவின் பேரில் கட்டப்பட்டு அன்புத்தொடர்பாக இருக்க வேண்டும் என்பதை மறந்துபோனால், ஆண்டான்— அடிமை என்பதற்குப் பதிலாக எத்தன் — ஏமாளி என்ற முறையிலே தொடர்பு திரிந்துபோய்விடும்.

எல்லாம் அவருக்குத் தெரியும் என்று ஏற்றுக் கொள்ளும் போக்கு பிறந்தவுடன், சுய சிந்தனை அடியோடு மடிந்துவிடுவதுடன், மற்றவர் கூறுவது சரியா அல்லவா என்று ஆராயும் கடமையும் மறைந்து, எல்லாம் தெரிந்தவரிடம் நாம் இது சரியா அது சரியா என்று கேட்பது கூடத் தவறு, அடாத செயல் என்று எண்ணிக்கொள்ளும் அசட்டுத்தனம் ஆட்கொண்டு விடும். அந்த நிலை பிறகு,

**நமக்கு என்ன தெரியும்**

என்று பேசவைக்கும்; நம்பவைத்துவிடும்; தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும்.

தாழ்வு மனப்பான்மை நிலைத்துவிட்டாலும், 'எல்லாம் தெரிந்தவர்' என்று தன்னாலே ஏற்றுக்கொள்ளப் பட்டு விட்டவரின் யோசனையைக் கண்ணை மூடிக் கொண்டு, 'பயபக்தி விசுவாசத்துடன்' பின்பற்றி நடந்தும், தொல்லை தொலையவில்லை, துயரம் போகவில்லை, என்றாகிவிட்டால், ஒரு கசப்பு, ஒரு ஏமாற்றம், ஒரு வேதனை மெள்ளக்கிளம்புகிறது.

அவர் சொன்னது சரியில்லைபோல இருக்கிறதே, நல்லதற்குத்தான் சொல்வார், அவர் எல்லாம் தெரிந்தவர் என்று நம்பி, எதைப்பற்றியும் நாம் யோசிக்காமல், அவர் சொல்வதைக்கேட்டு நடந்து வருகிறோம். ஆனால் பயன் நலனுள்ளதாக இல்லையே! அவர் கூறியது சரியில்லையோ! அவர் நாலுபேர்களைக் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வாவில்லையோ: அவரே சரியாக யோசிக்காமல் அவசரப்பட்டு ஒரு முறையைக் கூறிவிட்டாரோ; அவர் கூறிய முறை சரியில்லை, எதிர்பார்த்த நலனைத் தரவில்லை என்பதை அவருக்குக் கூறினால் என்ன? முறையைப்பற்றி அவரிடம் விவாதித்தால் என்ன? என்று எண்ணிடத்தோன்றும்; வேதனையும் ஏமாற்றமும் தாக்கும்போது. ஆனால் 'அவரிடம்' போய்க் கூற தைரியம் வராது. ஏன்?

**அவர் எல்லாம் தெரிந்தவர்!**

**நமக்கு என்ன தெரியும்!**

என்று நம்பிக் கூறியாகிவிட்டதே! அதனால் ஏற்பட்டு விட்ட தாழ்வு மனப்பான்மை, தயக்கத்தைத் தந்திடும். அப்போது, தயக்கத்துடன்,

**அவருக்குப்போய் நாம் சொல்வதா!**

என்ற பேச்சு பிறக்கிறது.

'நாம்' பார்த்து 'அவர்!' நமக்காக 'அவர்' என்றிருந்த நிலைமாறி, அவர், மேலானவர்; நாம்; தாழ்நிலையினர்! அவர் எல்லாம் அறிந்தவர்; நாம் ஏதும் அறியாதவர்கள்; அவர் கூறுபவர்; நாம், கேட்டுக்கொள்பவர்கள்; அப்படிப்பட்ட 'அவருக்கு' 'நாம்' சொல்லுவதா! —என்று எண்ணவேண்டிவந்ததும், ஜனநாயகத்தின் சாயலையும் பாழ்படுத்திக்கொண்டாகிவிட்டது என்பது பொருளாகிவிடுகிறது.

இன்னலால் தாக்குண்டநிலையில்,அவர்பெரியவராக, எல்லாம் தெரிந்தவராகவே இருக்கட்டும், ஏதோ நமக்குத் தெரிந்ததை, நமது நிலைமையை அவரிடம்போய்ச் சொன்னால் என்ன? சொல்லாவிட்டால் அவர் எப்படி நமது நிலைமையைத் தெரிந்துகொள்ளமுடியும் என்று எண்ணிக்கொண்டு, மெள்ள மெள்ளத் துணிவைத் தருவித்துக்கொண்டு, 'அவரிடம்' போய் தமக்குத் தோன்றியதைச் சொல்லச் சிலர் முற்படுவர்.

இதற்குள் 'அவர்' எல்லாம் எனக்குத் தெரியும்! உனக்கு ஒன்றும் தெரியாது! என்று கூறத்தக்க உயரம் சென்றுவிட்டிருப்பார். கூறுவதைக் காது கொடுத்துக் கேட்கமாட்டார்; கூறுவதிலே பொருள் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளமாட்டார்; கூறத்தகுதி படைத்தவர்கள்தான் கூறுகிறார்கள் என்று ஒப்புக் கொள்ளமாட்டார்! ஒரு அலட்சியப் புன்னகையோ கை அசைவோதான் பதிலாகக் கிடைக்கும்.

அந்த கசப்பான அனுபவம் பெற்றபிறகு,

**அவரிடம்போய் யார் பேசமுடியும்?**

என்ற ஏக்கப்பேச்சு புறப்படும்.

வேதனை வளர வளர, நாம் போய்ச் சொல்லுவோம், நாமாவது போய்க் கேட்போம் என்று வேறு சிலர் புறப்படுவர். 'அவரை'க் கண்டு பேசவே வாய்ப்பு கிடைக்காது; அனுமதி கிடைக்காது!

அவர் 'மேலே' மட்டுமல்ல; நெருங்க முடியாத நிலையில்!!—என்று ஆகிவிடும்.

அப்போது வேதனை ததும்பிடும் நிலையில் பேசுவர்.

**யாரை அவர் கிட்டே சேர்ப்பார்!**

**அவரைப் போய்ப் பார்க்க முடியுமா?**

**நம்மை எல்லாம் பார்க்க நேரம் ஏது!**

என்ற விதமாக.

இதுபோல, **'பலர்'** பார்த்து **'சிலர்'** தமக்காக ஆட்சி நடத்தட்டும் என்று அனுமதி கொடுத்தான பிறகு, ஜனநாயகத்தின் தூய்மை கெடுக்கப்பட்டுப்போய்விட்டால், 'சிலர்' ஆட்டிப் படைப்பவர்களாகவும் **பலர்** அனுபவித்துத் தீரவேண்டியவர்களாகவும் ஆகிவிடுவர். **குடியாட்சியே கொடுங்கோலாட்சியாகிப் போகும்.**

அதுபோல ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே, அத்தப் **'பலர்'** ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாயினும், அந்தச் **'சிலர்'** எல்லாம் தெரிந்தவர்கள் என்ற

எண்ணத்தைக் கொஞ்சம் தளர்த்தி, நமக்காகச் சென்றவர்கள் சரியானபடி சிந்தித்து, சிந்திக்கத் தெரிந்த பலருடைய அறிவுரைகளையும் கேட்டு தமது யோசனையைச் செம்மைப்படுத்திக்கொண்டு, நமக்குப் போதுமான நலன்களை செய்தளித்துள்ளனரா, என்று கணக்குப் பார்க்கும் முறை—பொதுத்தேர்தல் — வகுத்தளிக்கப் பட்டிருக்கிறது.

அந்தச்சமயத்தில், **'பலர்'** எந்தஅளவு கணக்குப் பார்க்கும் திறமையைச் செயலிலே காட்டுகிறார்களோ அதைப்பொறுத்தே 'சிலர்' சிலர்களாக இருப்பதும்இல்லாமற்போவதும் இருக்கிறது.

எல்லாம் அவருக்குத் தெரியும்
நமக்கு என்ன தெரியும்

என்று ஜெர்மானிய மக்கள் எண்ணிக்கொண்ட கட்டம் வந்ததறிந்த இட்லர், தேர்தலையே நிறுத்திவிட்டான்!

நம் நாட்டில் தேர்தலை நிறுத்தவில்லை; நடத்துகிறார்கள்; ஆனால், எந்த அடிப்படையில் என்றால்,

எல்லாம் காங்கிரசுக்குத் தெரியும்
மற்ற யாருக்கும் எதுவும் தெரியாது

என்ற அடிப்படையில்!

இந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டு, தேர்தலில் ஈடுபடுவது, இருப்புப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து திருவோடு எடுத்துக் கொண்டு, பிச்சைக்குக் கிளம்புவது போன்ற கேலிக் கூத்தாகிப்போகும்.


ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M.அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், சேவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.


காங்கிரசின் மூலவர்களின் மனப்போக்கு,

எல்லாம் எமக்குத் தெரியும்
மற்றவர்களுக்கு ஏதும் தெரியாது

என்று அடித்துப் பேசிடும் விதமாக இருக்கிறது என்பதை அக்கட்சியின் தலைவர்களின் பேச்சிலேயே தெரிந்து கொள்ளலாம்.

எந்தக் கட்சிக்கும் எந்தத் தகுதியும் கிடையாது என்பதுடன், எத்தகையவர் தம்முடன் சேர்ந்தாலும் அவர் எல்லாத்தகுதியும் பெற்றுவிடுகிறார் என்றும் கூறிடும் துணிவு தலைவிரித்தாடுகிறது.

அது மட்டுமல்ல, தம்மோடு இல்லாதவர்களை, தகுதியற்றவர்கள் என்று தாக்கிப் பேசிப் பேசி, அவர்களை மனம் உடையும் நிலைபெறச் செய்து, சிறிது அவர்கள் தடுமாற்றம் அடைந்ததும், 'கதவு திறந்தே இருக்கிறது! வருக!' என்று அழைப்பு விடுவதும், வந்தடைந்ததும் அவர்களை இந்திரனென்றும் சந்திரனென்றும் புகழ்வதும், காண்கின்றோம்.

சுதந்திரக் கட்சி, ராஜாக்கள் கட்சி என்று கேலி பேசினர். யாரார் அந்த ராஜாக்கள் என்று விவரம் தந்தனர்! இத்தகையவர்கள் மக்களின் ஆதரவைப் பெறத் தகுதி பெற்றவர்களா என்று கேட்டனர்.

அப்படிப்பட்டவர்களிலே ஒருவர் **ராம்கர் ராஜா.**

அவர் இப்போது தமது படையுடன், காங்கிரஸ் கட்சியிலே சேருகிறார்.

சேர்த்துக் கொள்ளலாமா என்று ஒரு குரல் கிளம்புகிறது.

தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது என்ற பதில் கிடைக்கிறது.

இன்னின்ன ஆற்றல் உள்ளவர்கள் எமது கட்சியில் உள்ளனர், ஆகவே எமது கட்சிக்கே எல்லாத் தகுதியும் உண்டு, மற்ற எந்தக் கட்சிக்கும் தகுதி இல்லை என்றுகூட, விளக்கம் தருவதில்லை.

எல்லாம் எமக்குத் தெரியும்

என்று ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்; இனி எவனும் எம்மை எதுவும் கேட்கக்கூடாது; எவனும் எதுபற்றியும் சிந்திக்கக்கூடாது! — என்று கூறத் தலைப்பட்டுவிட்டனர்.

எம்முடைய தகுதிபற்றி மட்டுமல்ல, எம்முடன் எவர்வந்து சேர்ந்திடினும் அவர்களின் தகுதிபற்றிக்கூட எவரும் ஏதும் கேட்கக்கூடாது என்று பேசுகின்றனர்.

இது ஜனநாயகம் ஆகாது! இந்நிலை வளர்ந்திடின் பிறகு, 'பலர்' பார்த்துச் 'சிலர்' ஆட்சி நடத்திடும் அனுமதி தருகிறார்கள் என்ற நிலையே போலியாகிப் போகும்; **'சிலர்'** இடத்தைப் பிடித்துக்கொண்டு, **'பலர்'** சிந்திக்க, உரிமை கேட்க, நல்வாழ்வுபெற வழி தராமல், ஆட்டிப்படைக்கிறார்கள் என்ற பயங்கரம் நிலைத்துப்போய்விடும்.

**'சிலர்'** என்று நான் குறிப்பிடுவது, காங்கிரசின் பெருந்தலைவர்களை மொத்தமாகக் குறிப்பது என்றாலும், அந்தச் **'சிலர்'** ஒருமித்த கருத்துகொண்டவர்களுமல்ல. அவர்களிலே யாரிடம் சூத்திரக்கயிறு சிக்கிக்கொள்கிறதோ அந்தச் **'சிலர்'** அதே கட்சியிலுள்ள **'பலர்'** அடங்கி ஒடுங்கிக்கிடந்திடும் நிலையை உண்டாக்கிவிடுகின்றனர்.

காங்கிரசில் இருந்துகொண்டே, குற்றம் குறைகளை எடுத்துக்காட்டித் திருத்தலாமே, மாற்றுத் திட்

டங்களைத் தந்திடலாமே, ஏன் கட்சியை விட்டு வெளியே சென்று எதிர்ப்புக் காட்டவேண்டும், எதிர்க் கட்சி ஏன் அமைக்கவேண்டும் என்று சில நேரங்களில் தேனொழுகப் பேசுகின்றனர், சூத்திரக்கயிரைப் பிடித்துக்கொண்டுள்ளவர்கள்.

ஆனால், காங்கிரசில் இருந்துகொண்டே, அதில் உள்ள குற்றம் குறைகளை எடுத்துக் கூறினால், மாற்றுத் திட்டங்களைத் தந்தால் அவைகளுக்குத் துளியேனும் மதிப்புத் தருகின்றனரா என்றால், இல்லை!

அவர் எப்போதும் அப்படித்தான்.

எதையாவது பேசிக்கொண்டிருப்பார்.

எதிலேயும் குறை கண்டுபிடிப்பார்.

தனக்கு நிரம்பத் தெரியும் என்று காட்டிக்கொள்ளும், போக்கு.

என்றெல்லாம் 'மூலவர்கள், கேலி பேசுவர்; அலட்சியம் செய்வர்.

குற்றம் குறைகளை அதிக வன்மையாகத் தொடர்ந்து கண்டித்தபடி சிலர் இருக்கின்றனர் என்றால்,

அவர்களை ஏதாவது பதவியில் இழுத்துப் போட்டு 'வாய்மூடி' ஆகிவிடும்படிச் செய்வதும்,

சரியான சந்தர்ப்பம் பார்த்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கட்சியிலிருந்து துரத்திவிடுவதும்,

சூத்ரதாரிகள் கையாளும் தந்திர முறைகளாகும்.

சென்ற திங்கள், நண்பர் **ராஜாராமும்** நானும், டில்லியில் பாராளுமன்ற கட்டிடமாடியில் அமைந்துள்ள உணவு விடுதியில் ஒரு பிரபலமான, முன்னணிக் காங்கிரஸ் தலைவரைப் பார்த்தோம்.

எனக்கு அவர்களிடம் பேசுவது அவ்வளவு எளிதாக இருப்பதில்லை; ஒரு கட்சியில் மிக முக்கியமான நிலையில் உள்ளவர்களிடம் எதையாவது பேசிடின் எரிச்சல் கொள்வார்களோ என்னமோ என்ற ஒரு எண்ணம்.

என்னைக் காட்டிலும் அதிகத் தாராளமாக அவர்களுடன் பழகுவார் நண்பர் **ராஜாராம்.**

அவர் அந்த காங்கிரஸ் தலைவரைப் பார்த்துக் கேட்டார், 'என்ன 1967 தேர்தலில், சட்டசபைக்கு நிற்கப்போகிறீர்களா? அல்லது பாராளுமன்றத்துக்கா? என்று.

அவர், ஏதோ சிந்தனையுடன், "கடைசி நேரத்தில் தான் தீர்மானிப்பேன்" என்றார்.

விடவில்லை ராஜாராம். வெடுக்கென வேறோர் கேள்வியை எழுப்பினார். "காங்கிரசில்தானே நிற்கப் போகிறீர்கள்?" என்று.

எனக்கு அந்தக் கேள்வி தூக்கிவாரிப்போடுவது போலிருந்தது. ஒரு பிரபலமான, பழம்பெரும் காங்கிரஸ் தலைவரைப் பார்த்து, காங்கிரஸ் அபேட்சகராகத் தானே நிற்கப் போகிறீர் தேர்தலில்' என்று கேட்பது, அவரைக் குத்துவதுபோல, அவமானப் படுத்துவது போல அல்லவா இருக்கும்; இப்படிக் கேட்டுவிட்டாரே **டிலக்சில்** போகப்போகிறீரா? **கிராண்ட் டிரங்கில்** புறப்படப்போகிறீரா? என்று ரயில் பயணம் பற்றிக் கேட்பார்களே அப்படியா தேர்தலைப்பற்றி இத்தனைப் பெரிய தலைவரைக் கேட்பது; அவர் கோபித்துக்

## கவிஞரில்லை!

காலை யுடன்மகள் கனிவு மனத்துடன்
கற்பனை நாடகம் ஆடுவதைப்
பாலைச் சிரிப்பொடு பவள மினுக்கொடு
பார்வையில் பேச்சுக்கள் பேசுவதை
நாளைக் கொருமுறை நேரினி லேயவர்
நட்பை வளர்த்திடக் கூடுவதை
தாளில் சுவடியில் தண்டமிழ்ச் சொல்லொடு
தனிக்கவி பாடிடக் கவிஞருண்டு!

வேளைக் கொருபிடி சோறுகி டைத்திட
வீட்டினில் மக்கள் புழுங்குவதை,
சாலைக் கடைகளில் கால்கள் கடுத்திடச்
சர்க்கரை அரிசிக்கு நிற்பதனை,
கோலைப் பிடித்தர சாள்பவர் செய்திடும்
கொடுமையைக்-கொள்கைக் குழப்பங்களை,
வேலை நிகர்த்திடும் கூரிய சொல்லொடு
மேல்கவி பாடிடக் கவிஞரில்லை!

—**பி. விடியா.**

கொள்ளமாட்டாரா? என்று எண்ணிப் பதறிக்கிடந்தேன்.

நான்தான் அதுபோலப் பதறிக்கிடந்தேனே தவிர ராஜாராமின் கேள்வி அந்தக் காங்கிரஸ் தலைவருக்குத் துளியும் கோபத்தையோ எரிச்சலையோ தந்ததாகத் தெரியவில்லை. அவர்மிக அமைதியாகச் சொன்னார், "அதுகூட போகப்போகத்தான் தெரியும்!" என்று.

இவ்விதமான நிலையில் பலர் இன்று காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள்.

அந்தப் பழையபிடிப்பு, எழுச்சி, ஆர்வம் துளியும் கிடையாது!

ஏதோ இருக்கிறார்கள்; வேறு எங்கே போவது என்று தெரியாததால் இருக்கிறார்கள்.

அதிலே கிடைக்கும் வசதிகளை இழந்துவிட மனமின்றி இருக்கிறார்கள்.

இவ்வளவு காலம் இருந்துவிட்டோமே என்பதால் இருக்கிறார்கள்.

இதன் காரணமாகவே அவர்கள் உண்மையான பற்று கொள்ளுவதில்லை; அதுபோலவே தங்கள் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்தும் கவலைப்படுவதில்லை.

நாம் சொல்லுவதைச் சொல்லிவைப்போம்; நடப்பது நடக்கட்டும் என்று இருந்துவிடுகிறார்கள்,

இந்த முறையிலே எடுத்துக் கூறப்படும் குற்றச்சாட்டுகளைக்கூடக் கேட்டுக்கொள்வதற்கான பொறுமை, காங்கிரசின் பெருந்தலைவர்களிடம் இல்லை என்பதை, இப்போது நடைபெற்ற அ. இ. கா. க. கூட்டம் எடுத்துக் காட்டிற்று.

**கிருஷ்ணமேனன்**
**மாளவியா**
**பகவத்ஜா அஜாத்**
**தாரகேஸ்வரி சின்கா**

என்போர், காங்கிரஸ் கட்சி, நாடாளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செம்மையாகச் செயல்படவில்லை என்பதுபற்றிக் கொதிப்புடன் பேசினர்.

ஆண்டு பதினெட்டு ஆகிவிட்டன; ஏழையின் வாழ்விலே ஏற்றம் இல்லை; வேதனைப் படுகுழியில்

தள்ளப்பட்டிருக்கிறான்; இத்தனைக் காலம் பொறுத்துக்கொண்டான்! இனிப் பொறுத்துக்கொள்ளமாட்டான்; பொங்கி எழுவான்; புரட்சி வெடித்துக் கிளம்பிடும் என்று மாளவியா கோபாவேசமாகப் பேசினார்.

> கல்கத்தாவிலும் பம்பாய், பஞ்சாப் போன்ற இடங்களிலும் நடைபெற்ற கிளர்ச்சிகளைக் காங்கிரசின் மூலவர்கள், பலாத்காரம் என்றும், கலகம் என்றும், மனமுடைந்து கிடக்கும் அரசியல்வாதிகளின் வாணவேடிக்கை என்றும் கண்டித்தனர்.
>
> **அந்தச் சம்பவங்கள் புரட்சியின் பொறிகள் என்று மாளவியா கூறினார்.**

ஏட்டிலே தீர்மானங்களை எழுதிவிடுகிறீர்கள் ஒய்யாரமாக! ஒன்றையாவது சொல்படுத்தி நாட்டை வாழ வைத்தீர்களா என்று இடித்துக் கேட்டார் **பகவத்ஜா அஜாத்.**

அமெரிக்காவிடம் கடன் வாங்கி வாங்கி நாட்டைக் குட்டிச் சுவராக்குகிறீர்கள்! இது அடாத செயல்!!— என்று கண்டித்தார் **கிருஷ்ணமேனன்.**

இந்தக் கண்டனங்கள், காங்கிரஸ் விரோதிகளின் பேச்சல்ல! காங்கிரஸ், தாங்கள் எதிர்பார்த்தபடியும், நாட்டுக்கு நலன் கிடைக்கிற முறையிலும் நடந்து கொள்ளவில்லையே, என்று மனம் குமுறி, காங்கிரசைத் திருத்தவேண்டிய கடமை தமக்கு உண்டு என்ற மெய்யுணர்வுடன் எடுத்துக் கூறப்படுபவை. **ஆனால் இவற்றினுக்குத் தரப்படும் மதிப்பு எந்தஅளவு இருக்கிறது?**

> கேட்பாரில்லை
> மதிப்பளிப்பாரில்லை

என்ற நிலை மட்டுமல்ல, மூலவர்கள் சீறியே விழுகிறார்கள்.

**இந்திரா காந்தி** அம்மையார் மெத்தக் கண்டிப்புடனும் கோபத்துடனும் பேசினார்களாம்.

> **போய்விடட்டும் வெளியே**

என்றே கூறிவிட்டார்களாம். அம்மையாரின் கோபம் அத்துடன் நிற்கவில்லை.

> என் தலைமையை நீங்கள் விரும்பவில்லை என்று தெரிந்தால் நான் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க மாட்டேன். வெளியே போய் விடுவேன்

என்றே பேசிவிட்டிருக்கிறார்கள்.

**எல்லாம் அவர் அறிவார்!** என்ற 'பஜனை' எந்த நிலைமையை உண்டாக்கிவிட்டது என்பது தெரிகிறதல்லவா!

> போ! வெளியே!!
> போகிறேன் வெளியே!!

என்ற ஆத்திரப் பேச்சு கிளம்பிடக் காண்கிறோம்.

> இது சரியா?
> இது முறையா?

என்ற கேள்வி, உள்ளிருந்து எழுப்பப்பட்டதும்.

பகவத்ஜா அஜாத் காங்கிரஸ் மூலவர்கள், சொல் வேறு செயல் வேறு என்றவிதமாக இருந்துவருகிறார்கள் என்று கேலி செய்து பேசியதைப் பார்வையாளர்கள் மிகவும் சுவைத்துக் கேட்டுக்கொண்டிருந்தனராம்.

இதுகண்ட மூலவர்களின் 'குடிபடை'யினரில் ஒருவர், இப்படி எல்லாம் பேசலாமா? என்று குரல் எழுப்பினாராம். உடனே பலருடைய குரல், பேசட்டும்! பேசட்டும்! பகவத்ஜா பேசட்டும்! அவர் பேச்சை நாங்கள் கேட்க விரும்புகிறோம்!! என்று எழும்பிற்றாம். ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

> **இதைக் கண்ட காமராஜர் கடுங் கோபங் கொண்டு இப்படி ஆரவாரம் செய்தால், உங்களை இந்த இடத்தை விட்டு வெளியேற்றிவிடுவேன் என்றாராம்.**

எல்லாம் அவர் அறிவார்! நாம் ஏதும் அறியோம்!!— என்று பலகாலும் கூறிக் கூறி மூலவர்களைப் பூஜித்த தன் பலன், மனக்குறையை ஒரு சிறு அளவு எடுத்துக் கூறினாலும்,

> போ! வெளியே!
> போய்விடுவேன் வெளியே!
> வெளியே துரத்திவிடுவேன்!

என்ற முறையிலே மூலவர்களைப் பேசவைக்கிறது.

என்ன சொல்லுகிறார்கள் என்று யோசிப்பதில்லை, மூலவர்கள்? ஏன் இப்படிக் குறைகூறிப் பேசுகிறார்கள்? எதை எதிர்பார்த்து? என்ன ஏமாற்றம்? என்ன கேட்டார்கள், எதை நாம் கொடுக்கவில்லை? என்ற முறையிலேதான் எண்ணுகிறார்கள். ஏதாவது பதவி கொடுத்தால் பசி அடங்கிவிடும்; பசி அடங்கிவிட்டால், படுத்துறங்கப் போவார்கள்; பரபரப்பு, பதைப்பு, கொதிப்பு, கோபம், எதுவும் இருக்காது என்று எண்ணுகின்றனர். அதற்கு ஏற்றபடி செயல்படுகின்றனர். ஆகவே அத்தகைய எதிப்பு, வலிவற்றதாகிப்போகிறது. மெள்ள மெள்ளக் குரல் மங்கிப்போகிறது!

> நமக்கென்ன ஏதோ நடக்கட்டும்
> நாம் இருக்க முடிகிறவரையில் இருப்போம்

என்ற மனப்போக்கு வளர்ந்துவிடுகிறது. எத்தனைக் காலம் காங்கிரசிலே இருப்போமோ, எப்போது வெளியேற்றிவிடுவார்களோ என்ற எண்ணம் மனதிலே குடைந்தபடி இருக்கிறது.

அந்த நிலையின் காரணமாகத்தான், நீங்கள் அடுத்த முறை காங்கிரசில்தானே தேர்தலில் நிற்கப் போகிறீர்கள் என்று ராஜாராம் கேட்டதற்கு அந்தக் காங்கிரஸ் தலைவர்,


**தி. மு. கழகம் & துணைமன்றங்களுக்கான**

## லெட்டர் பேடுகள்

அறிஞர் அண்ணாவின் எழிலுருவத்துடன்,
உதயசூரியன் பவனி வர பல வண்ணங்களில்

**தி. மு. கழக லெட்டர் பேடுகளும்**

கழகத் துணை மன்றங்களின் பெயர்களுக்கேற்ப (தலைவர்கள் கலைஞர்கள்) உருவம், பெயருடன் கண்கவரும் பலவண்ணங்களில், **துணைமன்றங்களின் லெட்டர் பேடுகளும்,** புதுமையாகவும், மிக அழகாகவும் நிர்வாகிகளின் பெயர், முகவரியுடன் தயாரித்து தருகிறோம்.

**விவரம், மாதிரி வேண்டுவோர்**
**15 காசு தபால் தலை அனுப்பவும்.**

## அரசு நிலையம்

(S. C. ஆறுமுகம்)
**119, குமர முதலித் தெரு, சேலம் - 1.**

போகப்போகத் தெரியும்!

என்று பதில் அளித்தார்; இவ்வளவு நிலையற்ற வாழ்க்கை!

ஆனால் தம்பி! **எனக்கும் தெரியும்!** — என்ற நம்பிக்கை கொண்டவர்களுக்காகத்தான் ஜனநாயக முறை வகுக்கப்பட்டதேயன்றி, **எனக்கு என்ன தெரியும்!** என்ற இழுப்புப் பேச்சுக்காரர்களுக்காக அல்ல.

**'பலர்'**—என்றென்றும் ஒதுங்கி ஒடுங்கிக் கிடப்பார்கள், என்று எண்ணிக்கொண்டுதான் காங்கிரசின் பெருந் தலைவர்கள் 'தர்பார்' நடத்துகின்றனர்; உலா வருகின்றனர்.

ஆனால் நாட்டு மக்களோ அந்தப் பெருந் தலைவர்கள் கருதிக் கொண்டிருப்பதுபோல இல்லை.

**'பலர்'** அனுமதித்தால்தான் **'சிலர்'**

என்ற பேருண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளனர்

**எமக்கும் தெரியும்** என்று எடுத்துக் கூற முன் வந்துவிட்டனர்.

**எம்மைப்போல இருந்தவர் தாமய்யா நீவிர்! எங்கிருந்தோ வந்துதித்த அற்புதங்கள் அல்ல!!** என்று கூறத் துணிந்துவிட்டனர்.

கொச்சையாகக் கூறுவதானால் தம்பி! பொது மக்கள் இன்று, எல்லாம் எமக்குத் தெரியும்! மற்ற எவருக்கும் எதுவும் தெரியாது! என்று இறுமாந்து பேசுவர்களைப்பற்றி

**பிடித்து வைத்தால் பிள்ளையார்! வழித் தெடுத்தால் சாணி!!**

என்ற முறையிலேதான் கருதுகிறார்கள்.

இலக்கிய நடையில் இது கூறப்பட வேண்டுமா, தம்பி!

**பிடித்தால் கற்றை விட்டால் கூளம்!**

என்று **'மனோன்மணியம்'** தெரிவித்திருப்பதைத் தருகிறேன்.

**'பலர்', 'சிலர்'**—ஆகியோருக்கு இடையே உள்ள தொடர்புஆண்டான்-அடிமை ன்பது அல்ல அதுஅன்புத் தொடர்பு-அறிவுத் தெளிவின் பேரில் கட்டப்பட்ட தொடர்பு என்பதை, இன்று ஆளப் பிறந்தவர்கள் தாமே என்ற அளவு ஆணவம் பிடித்து அலைவோர் உணர்ந்திடத் தக்கவிதமாக, 1967 அமையவேண்டும்.

அந்த தூயபணிக்காகத் தொண்டாற்றுகிறோம் என்ற உணர்வு, தம்பி! உன் ஆற்றலைப் பன்மடங்காக்கும். உன் வெற்றியிலே ஜனநாயகத்தின் எதிர்காலமே அடங்கியிருக்கிறது.

**அண்ணன்,**


அண்ணாதுரை


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன விளங்குவது

**ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்**

**சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.**

**(Recognised by Central Board of Indigenous Madicine Madras)**




பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்கரத்தோப்பு எதிர்) பெரியகடை வீதி, திருச்சி-8.
28 நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்ககட ரோடு, தஞ்சாவூர்.
47A, கன்னையமாள் கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

# பாண்டியன் திருமேனி



கே.ஜி. இராதாமணாளன்

## 2—2

## இவளா திருமேனி?

"புத்தவிகாரத்தில் என்னை முறைத்து முறைத்துப் பார்த்தாள்! இதோ, பூஞ்சோலை என்று அழைத்துக்கொண்டு வருகிருள்! யார் இவள்? என்னை நாடி வரக் காரணம் என்ன?"

ஒன்றும் புரியாமல், அழகுநடை நடந்து வந்தவளைப் பார்த்தபடி, அருகே இருந்த மரக்கிளை ஒன்றைப் பிடித்துக்கொண்டு அவன் நின்ருன்.

பக்கத்தில் வந்து நின்று, புன்னகையோடு, 'வணக்கம்!' என்ருள், இரு கைகளையும் கூப்பி.

'வணக்கம்!'

அவன் குரலில் சிறிது தடுமாற்றம் இருந்தது.

'தாங்கள் திருநெல்வேலியா?'

ஆமாம்! நீ?

'நான்...மதுரை!'

அதைக் கேட்டதும், அவன்மனம் திடுக்கிட்டது.

'உன் பெயர்?'

'அஞ்சலை! தாங்கள் பௌத்தர் தானே?'

'இல்லாவிட்டால், திருநெல்வேலியிலிருந்து இவ்வளவு தூரம் ஏன் வந்திருக்கப்போகிறேன்?'

'பௌத்தம் தழைக்கவேண்டும் என்பதற்காகத்தான், பாண்டிய மன்னரை ஒழிக்கவேண்டுமென்று பேசினீர்களா?'

"ஏதோ சந்தேகத்தோடு இந்தக் கேள்வியை நீ கேட்பதாகத் தெரிகிறது."

'ஆமாம்! ஏதாகிலும் சொந்த வஞ்சத்திற்காக, அவர்மீது பழி தீர்த்துக்கொள்ள, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறீரா என்ற சந்தேகம் எனக்கு உண்டாகிறது!'

"அப்படிச் சந்தேகம் எழக் காரணம்?"

"எனக்கும் சொந்தத்தில் அவர் மீது ஓர் வஞ்சம் உண்டு! என் சந்தேகம் உண்மையானுல், உங்கள் எண்ணம் ஈடேற, என்னுலானதைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்!"

"காஷாயம் அணிந்து, துறவு பூண்டு, பௌத்த பிக்குணியாகத் தோன்றும் உனக்குக் கூடவா விரோதிகள் இருக்கிருர்கள்! ஆசை, வெறுப்பு, அறியாமை எனும் மலங்களை அறுத்து, 'நான்' 'எனது' என்ற பற்றற்று 'சகல உயிர்களிடத்தும் தாயன்புகொண்டு வாழ வேண்டிய நீ, சொந்தத்தில் குலசேகரன்மீது வஞ்சம் இருக்கிறது என்று கூறுவதைக்கேட்டு, ஆச்சரியம் மட்டுமல்ல, அதிர்ச்சியுமடைகிறேன்?"

"சீவாமல் கூந்தலைக் கோதி முடிக்கவும், சீவர ஆடை அணியவும், காரணமே அவர்தாம்! செங்கோலுக்கு அவர் ஆசைப்படாமலிருந்திருந்தால், இந்தக் கன்னிப் பருவத்தைப் புத்த விகாரத்தில் கழிக்கவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டிருக்காது!"

"உன் பேச்சு எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! நீ யார்? எனக்கு அவன் செய்தகேடு என்ன?"

"நான்தான் அஞ்சலை என்றேனே"

"பெயரைச் சொல்லிவிட்டால், நீ யார் என்பது எனக்குப் புரிந்துவிடுமா என்ன?"

"பொன்னையா என்று தாங்கள் கேள்விப்பட்டிருக்கிறீரா?"

"யார்? குலசேகரன்மீது வேல் எறிந்தானே—அந்தப் பொன்னையாவா?"

"ஆமாம், அவர் தங்கைதான் நான்!"

உள்ளத்தில் திடீரென்று யாரோ சூட்டுக்கோலை நுழைத்ததுபோன்ற உணர்ச்சி, அவனுக்கு உண்டாயிற்று! 'பொன்னையாவின் தங்கையா இவள்' என்றகேள்வி நூறு முறை எழுந்து, அவன் இதயச் சுவர்களைக் கிடுகிடுக்கச் செய்துவிட்டது!

"பொன்னையா!" என்று அவன் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டான்.

"பூஞ்சோலை! என் அண்ணாவைக்கொன்ற அந்த அவசரக்காரரின் உயிர் இப்பொழுது என் கையில் இருக்கிறது! நான் நினைத்தால் போதும் இதே நொடியில் அவர் பிணத்தை என்னுல் காண முடியும்!"

"அப்படியா?"

"ஏன் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைகிறீர்? முகம் விகாரமாகிவிட்டதே காரணம் என்ன? நான் நினைத்தால் குலசேகரனின் பிணம் தரையில் விழும் என்றதும், எதற்காகத் தங்கள் முகம் வெளிறவேண்டும்? குலசேகரன் கொல்லப்படவேண்டும், அவன் பிணம் கல்லறைக்குச் செல்லவேண்டும், அந்தக் கல்லறைமீது புத்த விகாரம் எழவேண்டும் என்று கொக்கரித்தீரே—அவ்வளவும் பொய்யா? அவ்வளவும் நடிப்பா?"

"இல்லை அஞ்சலை. இல்லை! அவனைக் கொல்லவேண்டும் என்பதில், உன்னைப்போலவே எனக்கும் துடிப்பு இருக்கிறது!"

"உண்மையாகவா?"

'ஆமாம்!'

'குலசேகர பாண்டியனைக் காட்டினுல், உடனே குத்திக் கொன்றுவிடுவீர்—அல்லவா!'

'அதற்குத் தடையு முண்டோ?'

'அப்படியானுல் இதை பிடியுங்கள் காட்டுகிறேன்' என்று சொல்லிக்கொண்டே இடையில் மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்து, அவன் கையில் தந்தாள்.

அதை வாங்கும்போதே அவன் கை சில்லிட்டு விட்டது!

"வாளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்! வரவழைக்கிறேன் அவரை! தயாராக இருங்கள்!

தாமதித்து விடாதீர்—உடனே அவரைத் தாவிப் பிடித்துக் குத்திக் கொன்றுவிடுங்கள்!''

அவன் முகத்தில் சட்டென்று ஒரு மருட்சி தோன்றியது. நெஞ்சு தடக் தடக்கென்று அடித்துக் கொண்டது. காலடியிலிருந்த தரை இரண்டாகப் பிளந்து, அந்தக் கிடுகிடுக்கும் பள்ளத்தில் தலைகீழாக உருண்டு விழுவதைப்போல அவனுக்குத் தோன்றியது.

“அழிவு! அழிவு! அனைத்தும் அழிந்துவிட்டன! சகல திட்டங்களும் சாம்பலாகிவிட்டன! கறுவியிருந்தவளின் கண்ணில் பட்டுவிட்டேன்! இவள் உதடு அசைந்தால் போதுமே, இதே இடத்தில் என் உயிர் உடலை விட்டுப் பிரியுமே! படுகுழியில் என்னை நானே தள்ளிக்கொண்டேனே! என்ன மதியீனம்!' என்று மனதிற்குள்ளேயே அவன் கதறினான்.

திகில் உலவும் முகத்தோடு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனையும் அறியாமல், கையிலிருந்த வாள் நழுவி தரையில் விழுந்துவிட்டது.

“பயப்படாதீர்கள்! இதோ குலசேகர பாண்டியர் — பிடித்துக் கொள்ளுங்கள் என்று உம்மைக் காட்டிக் கொடுத்துவிட மாட்டேன்!' என்று அஞ்சலை குறுநகையோடு கூறிவிட்டு, தரையில் கிடந்த வாளைக் குனிந்து எடுத்தான்.

“அஞ்சலை!'' என்று வேதனையோடு கூறி, அருகேஇருந்த பாறையின்மீது குலசேகரன் சோர்ந்து உட்கார்ந்துவிட்டான்.

புத்த விகாரத்தில் இவ்வளவு நாள் நான் இல்லாமலிருந்து, அறிவொளி அடிகளின் நல்ல கருத்துக்கள் என்உள்ளத்தில் புகாமலிருந்து — இத்தகைய நிலையில் தாங்கள் என்னிடம் சிக்கியிருந்தால் — இந்நேரம் இந்த உடைவாள், உமது இதயத்தின் ஆழத்தைப் பார்த்துவிட்டிருக்கும்! ... எனது அண்ணா உம்மைக் கொல்ல வேல் எறிந்தார்! உம்மீது அவருக்கு ஏதாகிலும் சொந்த விரோதமா? உம்மைச் சாகடித்துவிட்டால், மணிமுடி தனக்கு வந்துவிடும் என்ற எண்ணமா?''

“என்னை ஏன் கொல்லத் துணிந்தான் என்பதற்கான காரணங்களைப் பொன்னையாவே ஆவேசக் குரலில் சொன்னான். அந்தக் குரல் இன்னமும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது அஞ்சலை. பொன்னையா உத்தமன் என்பதை நான் அறிவேன்! அறிந்தும் அவன் மரணத்திற்கு நான் காரணமானேன்! ஏன்?''

“ஓராயிரம் காரணங்கள் சொல்ல முடியும், இப்பொழுது தங்களால்!''

“ஆமாம், நான் என்ன சொன்னாலும் இந்த நிலையில் உனக்கு நம்பிக்கை ஏற்படாதுதான்! காலம் காட்டப்போகிறது அஞ்சலை — இந்தக் குலசேகரன் சுயநலக்காரன் அல்ல, சூதுக்காரன் அல்ல என்பதை!'' என்று சொல்லிக் கொண்டே, தலைப்பாகையையும், போர்வையையும், பொய் மீசையையும் எடுத்துப் பக்கத்தில் வைத்தான்.

“உன் அண்ணன் இறந்த துக்கம் தாள முடியாமல், நீ பௌத்த சந்நியாசினியாகி விட்டாயா, அஞ்சலை?''



“இல்லை! உமது ஆட்சியில் நடைபெறும் அக்கிரமத்தைத் தாள முடியாமல் இப்படிக் காஷாயம் தரிக்க வேண்டியதாயிற்று! இது வெறும் வெளிவேஷமே அன்றி, உண்மையில் நான் சந்நியாசினி அல்ல!''

“எவன் செய்தான் உனக்குக் கேடு, சொல் அஞ்சலை! அவனை இரு துண்டுகளாக வெட்டி வைகையில் வீசியெறிகிறேன்!''

“அதுதான் உம்மால் முடியாது!''

“ஏன்?''

“உள்ளத்தில் கோபம் கொப்பளித்து எழுந்தால்கூட, உம்மால் அவனை ஒன்றும் செய்யமுடியாது! அவன் நினைத்தால், உம்மை இரு துண்டுகளாக அல்ல, இரண்டாயிரம் துண்டுகளாக வேண்டுமானாலும் வெட்டிப் போட முடியும்! உமது செங்கோலை உடைக்கலாம். சிம்மாசனத்தைப் பறிக்கலாம்! ஆமாம், அவன் நினைத்தால் நடக்கும் சகலமும்!''

தூமகேதுவா உனக்குக் கேடு செய்தான்? என்ன செய்தான்?

சொல், அஞ்சலை.

ஒருநாள் மாலை குளக்கரையில் அவளைத் தூமகேது பார்த்துப் பல்லிளித்ததையும், மறுநாள் அதே இடத்திற்கு வந்து காமவெறி பிடித்து அவன் உளறியதையும், பொன்னையா தூக்கிலிடப்பட்ட அன்றிரவு வீட்டிற்கு வந்து பலாத்காரம் செய்ததையும் ‘குலசேகரனுக்கு உன்னை மனைவியாக்கி விடுகிறேன்! என் சொல்லை அவன் ஒரு நாளும் தட்டமாட்டான்! ஒருமுறை நீ என் இச்சைக்கு இணங்கினால் போதும் — பார், அந்தப் பாண்டியனை—உன் பாதங்களில் விழுந்திருக்கும்படி செய்கிறேன்!' என்று ஆசை காட்டியதையும், அதைக் கேட்டு ஆத்திரமடைந்து, ‘நாடற்றவனே, நல்ல பண்பு அற்றவனே உனக்குத் தெரியுமாடா தமிழ்ப் பண்பு திரௌபதியின் இனத்தில் பிறந்தவள் அல்லடா நான்—கண்ணகியின் வம்சத்தில் வந்தவள்!' என்று அவள் கொக்கரித்ததையும்; கண்ணகியா நீ, அதையும் பார்க்கிறேன்!' என்று கோபத்தோடு அவள் வெளியே சென்றதையும் அவனால் எப்படியும் கேடு நேரிடும், ஆகவே மறுநாளே மதுரையை விட்டுப் புறப்பட்டாக வேண்டுமென்று சோலையப்பன் சொல்லியதையும்—கண்களில் நீர் பெருக அஞ்சலை சொல்லி நிறுத்தினாள்.

‘பிறகு?' என்றான், சோகமும் ஆத்திரமும் நிறைந்த குரலில் குலசேகரன்.

‘என் அண்ணா கொல்லப்பட்ட மறு நாள் இரவு அத்தான், சோலையப்பன் என்னை அழைத்துக் கொண்டு, மதுரையைவிட்டுப் புறப்பட்டார். இராமேச்சுரத்திலுள்ள புத்த விவகாரத்தை அடைந்தோம்! அறிவொளியடிகளிடம் என் வரலாற்றைக் கூறித் தாம் திரும்பி வந்து அழைத்துப் போகும்வரைக்கும் என்னைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்படி, அத்தான் கேட்டுக்கொண்டார். அன்று முதல் யாதொரு குறையுமின்றி, பௌத்த பிக்குணியைப்போலச் சீவர உடை

அணிந்து, இராமேச்சுரத்திலேயே இருந்து வருகிறேன்!......'

அவள் பேச்சை இடையிலேயே நிறுத்திவிட்டாள்—யாரோ சிரிப்பதைக் கேட்டதும்! அவசர அவசரமாகக் குலசேகரன் தன் பொய் மீசையை எடுத்து ஒட்டிக்கொண்டு தலைப்பாகையை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு, எழுந்து நின்று விழிக்க விழிக்கச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

'எங்கெங்கோ பார்க்கிறீர்களே—இங்கே பாருங்கள்!' என்ற பெண்ணின் இனிய குரலும், தொடர்ந்து சிரிப்பொலியும் கேட்டதும், அவர்கள் தலைநிமிர்ந்து மேலே பார்த்தனர்.

அருகே இருந்த ஆலமரத்தின் கிளைமீது, பசும்பொன்னில் வார்த்தெடுத்த சிலைபோன்ற ஓர் கட்டழகி உட்கார்ந்திருந்தாள்! திரும்பவும் அவள் கலகலவென்று சிரித்துவிட்டு, ஆலம்விழுதைப் பிடித்து ஊஞ்சலாடி தொப்பென்று அவர்கள் எதிரே வந்து குதித்தாள்.

"ஏன் இப்படித் திருட்டு விழி விழிக்கிறீர்கள்? நான் யார் என்று தெரியவில்லையே! ஆமாம், தெரியாது! ஆனால் நீங்கள் யார் என்பதை நான் தெரிந்துகொண்டேன்!' என்று செவ்விதழை மடித்து அழகு காட்டிவிட்டு, அந்தத் துடியிடையாள்-பக்கத்திலிருந்த மரமல்லிகை மரத்தின் கிளையொன்றைப்பிடித்து ஊஞ்சலாடத் தொடங்கினாள்.

"இவள் யார் தெரிகிறதா?" என்று அஞ்சலை மெள்ளக் கேட்டாள்.

"இவளா திருமேனி?"

"ஆமாம் அரசே! இலங்கை அரசன் பராக்கிரமபாகு பெற்ற பூங்கொடி இவள்தான்!"

"பாவம்! இவ்வளவு அழகோடு இருக்கும் இவளுக்கா பைத்தியம் பிடிக்கவேண்டும்" என்று குலசேகரன் 'இச்' கொட்டினான்.

"என்ன இரகசியம் பேசுகிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே, ஊஞ்சலாடுவதை விட்டுவிட்டு, அவர்கள் அருகே வந்து நின்றாள், திருமேனி.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்" பேசுங்கள்; இரகசியம்! என் காதில் அது விழுந்துவிடுமோ என்று பயப்படுகிறீர்களா! பயப்படாதீர்கள்! இரண்டு காதுகளையும் இரண்டுகைகளால் இறுக அழுத்திக் கொள்கிறேன்! என்று கைகளால் காதை மூடிக்கொண்டு, உடலை ஆட்டிக்கொண்டு நின்றாள்.

"இவ்வளவு நேரம் நாம் பேசியதை, இவள் கேட்டுவிட்டிருப்பாளோ! என்னை யார் என்று தெரிந்துகொண்டிருப்பாளோ?"

இந்தப் பைத்தியத்தைக் கண்டா பயப்படுகிறீர்கள்? இவள்தான் நினைவு தப்பியிருக்கிறாளே—நாம் பேசுவது எங்கே இருந்து புரியப் போகிறது?" என்று அஞ்சலை சிரித்தாள்.



"சுத்தப் பைத்தியம்!"

'பரிதாபம் அஞ்சலை, பரிதாபம்!' என்று குலசேகரன் சொன்னதும்,' திருமேனி கண்களைத் திறந்து பார்த்து, 'அஞ்சலை! அது யார் பெயர்? உன் பெயரா அல்லது இவள் பெயரா?" என்று விழிகளை உருட்டி, விரலைக் கடித்தபடிக் கேட்டாள்.

"இவள் பெயர்தான், அஞ்சலை!"

"அஞ்சலை! ஆமாம், நினைவிற்கு வருகிறது, நிகண்டு! அஞ்சலிதான் அஞ்சலையாயிற்று! அஞ்சலி என்றால்-கும்பிடு, வணக்கம்....இப்படி அடுக்குமல்லிகையைப்போல் அநேக பொருள் உண்டு! அஞ்சனம் என்றால், கண்ணுக்கிடும் மை-அது தேவையில்லை இங்கே! 'லை'—'னை'யானால், அஞ்சலை—அஞ்சனையாகிறாள்! அஞ்சனை யார்?

அனுமானைப் பெற்றவள்! அனுமான் யார்? காணாமற்போன இராமன் மனைவியைக் கண்டுபிடித்தவன்! இராமன் யார்? என் அழகு மனைவி சீதையை எந்த ஆணோ தூக்கிக்கொண்டு போய்விட்டானே என்று தலைமேல் கைவைத்துத் தேம்பியழுதவன்?'

'சீதை யார்?' சிரித்துக்கொண்டே குலசேகரன் கேட்டான்.

'சீதை யாரா? நீ கேட்டுவிட்டாய் அதனால் அதைச் சொல்லப்போவதில்லை நான்!'

'அப்படியானால் சொல்ல வேண்டியதில்லை!'

'நீ சொல்லவேண்டியதில்லை என்றால், நான் சொல்லாமல் நிறுத்திக் கொள்ளவேண்டுமா? முடியாது! சொல்லத்தான் போகிறேன்!......" சீதை யார்?......சீதை யார்?......... சுத்தமோசம்! சுத்தமோசம்! சே, சே கேட்டதெல்லாம் மறந்தே போயிற்றே! ஆ! நினைவிற்கு வந்துவிட்டது! இல்லை இல்லை! சந்தேகம் வந்துவிட்டது!

'என்ன சந்தேகம்?'

'சீதை, இராவணன் மனைவியா-இராமன் மனைவியா? பலத்த சந்தேகம்? பலத்த சந்தேகம்! இந்தா, உன் பெயரை என்னவென்றோ சொன்னாயே!'

'என் பெயரை இதுவரைக்கும் நான் உனக்குச் சொல்லவே இல்லையே!'

'சொல்லாவிட்டால் பரவாயில்லை இப்பொழுது சொல்—அவசரமாக அது எனக்குத் தெரிந்தாக வேண்டும்!'

'பூஞ்சோலை!'

'உன் பெயர்தானே, வேறு யார் பெயருமில்லையே!'

'என் பெயர்தான் அது!'

'சரி, ஒத்துக்கொண்டேன்! என்ன சோலை?'

'பூஞ்சோலை!'

'பூஞ்சோலை! சீதை யார் மனைவி என்று பெரிய சந்தேகம் வந்து விட்டதே, இப்பொழுது என்ன செய்வது?''

"எனக்கொரு வழி தோன்றுகிறது! அதன்படி செய்தால், அவள் யார் மனைவி என்பதை நிச்சயமாகக் கண்டுபிடித்துவிடலாம்!'

'சொல் அப்படியே செய்யலாம்!'

'சீதை, இராவணன், இராமன் ஆகிய மூவரையும் இங்கே வரவழைக்க வேண்டும்-முடியுமா?'

'ஏன் முடியாது? என் அப்பா யார் தெரியுமா உனக்கு?' இலங்கை அரசர் பராக்கிரமபாகு! அவர் ஒரு கட்டளை பிறப்பித்தால் போதும்-காற்று வேகத்திலே அந்த மூவரும் இங்கே வந்து விழவேண்டும்!''

"அந்த மூவரையும் இங்கே வரவழைத்து, அந்த அரசமரத்தினடியில் சீதையை நிற்கவைக்க வேண்டும்! இதோ தெரியும் பலாமரத்தின் பக்கத்தில் இராவணனையும், அதோ இருக்கும் எட்டி மரத்தன் அருகில் இராமனையும் நிற்கவைக்க வேண்டும்!''

"சரி, அப்படியே நிற்கச் சொல்கிறேன்!''

"மூவரையும் தூரதூரமாக நிற்கவைத்துவிட்டோமா?......

"சிவந்த மேனியாளே! சிரித்த முகத்தாளே! சீதா! என் சிந்தைக் கவர்ந்தவளே, வா! மயிலே, நீ ஆடிவா! குயிலே, நீ பாடிவா! வா கண்ணே வா!'' என்று மாறிமாறி இராவணனும் இராமனும் அழைக்க வேண்டும்! இடை அசைய, இன்பப் புன்னகையோடு, எவன் அருகே சீதை செல்கிறுளோ—அவன்தான் அவள் கணவன்!''

இப்படிக் குலசேகரன் சொன்னதும், அஞ்சலை வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்.

"விடாதீர்கள்! பிடியுங்கள்! பிடியுங்கள்!'' என்று பலர் கத்துவதைக் கேட்டதும், குலசேகரனும் அஞ்சலையும் சப்த நாடிகளும் அடங்கினவர்களாய் அசைவற்று நின்றுவிட்டனர்! இப்படியும் அப்படியும் கண்ணை உருட்டிப் பார்த்து விட்டு, பக்கத்திலிருந்த புதருக்குள் நுழைந்தாள் திருமேனி!

[வளரும்]

4-ம் பக்கத் தொடர்ச்சி

னென்ன சாப்பிட்டார் என்று தன்னுல் கூறமுடியும் என்று! அப்படி ஒரு சாமர்த்தியம்!! உலகம் பலவிதம் என்று சும்மாவா சொன்னர்கள்! ஆகவே இதிலே சாமர்த்தியம் இருக்கிறதா இல்லையா என்பதல்ல முக்கியம்! இது தேவைதானு! வேறே உருப்படியான வேலையே தெரியாதா என்பதுதான் கேள்வி! ஆனல் இயல்பை எளிதாக மாற்ற முடியுமா!

(11) காமராஜர், அகில இந்திய காங்கிரஸ் தலைவரான பிறகுதான், காங்கிரசுக்கே 'அதிர்ஷ்டம்' பிறந்திருக்கிறது என்று பேசுகிருர் ஒரு காங்கிரஸ் பேச்சாளர். என்ன சொல்கிறீர்!

அவர் உமக்குத் தெரிந்தவராக இருந்தால் அப்படியெல்லாம் பேசவேண்டாம் என்று சொல்லி வையுங்கள். காமராஜர் தலைவரானதால்தான் காங்கிரஸ் கட்சிக்கு அதிர்ஷ்டம் என்று இவர் பேசினுல், இந்த நாட்டுப் பெரியவர்கள் வருத்தத்துடன் இந்தக் காமராஜர் காங்கிரஸ் தலைவரான பிறகுதானே அப்பா, ஜவஹர்லால்நேரு போய்விட்டார்! லால் பகதூர் சாஸ்திரி மறைந்தார்! இதெல்லாம் அதிர்ஷ்டமா அப்பா! என்று கேட்பார்கள்.

**(12) திருவள்ளுவர்சிலை அமைப்பில் ஊழல் என்கிறர்களே காங்கிரஸ்காரர்கள்; இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?**

மாநகராட்சி மன்ற ஊழல் வாரம் நடாத்தி அந்த உமிழ்நீரிலேயே மூழ்கிப் போனதுகள், மெள்ள தலைதூக்கிப் பார்க்கின்றன. அடுத்த வீட்டுக்காரி ஆறு பிள்ளைக்குத் தாயாகிவிட்டாளே என்று மலடி ஒருத்தி அம்மிக் குழவியை எடுத்து அடிவயிற்றில் இடித்துக்கொண்ட கதை தெரியுமல்லவா உமக்கு! அதுதான்இது. இந்த மலடிகளை நினைத்துக் கொண்டால், வள்ளுவப் பெருந்தகை ஏன் இந்த இழிந்த நாட்டில் பிறந்தார் என்று எண்ணத் தோன்றுகிறது. எதனையும் உருப்படியாய்ச் செய்ய வக்கற்றதுகள் பேசும் வாய்வீரம் கண்டு நான் வேதனைப்படவில்லை; அனுதாபப்படுகிறேன். ஊழலுக்கும் ஊழல் ஆட்சிக்கும் வித்திட்டவர்களே இன்று ஒப்பாரி வைக்கிருர்கள், உண்மையை மறைக்க—**உணர்வுகளைக் கெடுக்க, உருளைக்** கிழங்கு பேரம் செய்து ஒரு லட்ச ரூபாய்க்கும் மேல் உங்களுடையவும், என்னுடையவும் வரிப் பணத்தைப் பாழ் படுத்தியவர்களைப் போலல்லாது, ஒப்பந்த விண்ணப்பங்கள் சில, குறைந்த தொகைக்கு அளிக்கப் பட்டிருந்தாலும், உத்திரப் பிரதேச உருளைக் கிழங்காகஇல்லாமல், ஒழுங்கான — கெட்டுப்போகாத சரக்காக — மனநிறைவு பிடித்த—எல்லா அம்சங்களிலும் சிறந்த—நாலு பேர் ஒப்புக்கொண்ட ஒன்றைத்தான்—**சற்று அதிகவிலையேயானுலும், பகல் சாப்பாட்டுக்குத் தேவையான அரிசி, பதினேருமணிக்காவது கிடைக்கிறதே என்பதற்காகத்தான்**, மாநகராட்சி, சற்றேஉயர்ந்தஒப்பந்தவிண்ணப்பததை ஏற்றுக்கொண்டது. இது அவசிய, அவசரத்தைமுன்னிட்டு, ஆனல் ஒழுங்கான முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. வாய்மையைப் பற்றியும், வாழ் நெறி பற்றியும் வகைப்படுத்தி வழிகாட்டிய வள்ளுவரின் சிலை வைப்பில்கூட, பொச்சரிப்பை வெளிக்காட்டிக் கொள்கிருர்கள், தாம் செய்யத் தவறியதை, நாம் செய்கிறேமே என்று! வருகிற ஜூன் 2-ம் நாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னை மயிலாப்பூரில்,பொய்யாமொழிப் புலவரின் சிலையைத் திறந்துவைக்க இருக்கிருர்கள். அதற்குள் சில ஆலவட்டங்கள் ஆர்ப்பரிக்கின்றன. அவ்வளவுதான்.


**வாசித்தீர்களா?**

# "கன்னி"

**சுவையான குடும்ப மாத இதழ்.**

ஆசிரியர் :

**இரணியல் ரவ, B SC., B L.**

நெஞ்சை யள்ளும் சிறு கதைகள், பயனுள்ள துணுக்குகள், திரைச் செய்திகள், கவர்ச்சிப் படங்கள், கேள்வி - பதில் போன்ற இன்னும் பல சுவையான பகுதிகளைக் கொண்டு ஆணித்தரமாக அரசியல் கருத்துக்களைத் தெரிவிக்கும் தி. மு. க. மாத இதழ்!

**தனி இதழ் 25 காசு ஆண்டு சந்தா ரூ. 3**

விற்பனையாளர் இல்லாத ஊர்களில் விற்பனையாளர் தேவை, விபரங்கட்கு :

**"கன்னி"**

**இரணியல் - நெய்யூர் தபால்**

**கன்னியாகுமரி மாவட்டம்.**

# இப்பொழுது நடைபெறுகிறது




M.R.ராதா · M.N.நம்பியார் · அசோகன் · நாகேஷ் · குலதெய்வம் ராஜகோபால்
ஜெயலலிதா · பண்டரிபாய் · பாரதி · மனோரமா · S.N.லட்சுமி

ELEGANT

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் ,சி, என், அண்ணாதுரை.